**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.51** **நாள் : 23.01.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மேயர் இராமநாதன் சாலையில் ரூ.41.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் காரியக் கூடத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-108, மேயர் இராமநாதன் சாலையில் மாமன்ற உறுப்பினர் 2024-25ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் ரூ.16.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாயவிலைக் கடையினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (23.01.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், மாமன்ற உறுப்பினர் 2024-25ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட காரியக் கூடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் திரு.எல்.சுந்தர்ராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திருமதி சண்முக வள்ளி, துணைப் பதிவாளர்கள், அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**